# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண். 242 / 2019

வா.சா.1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி நாள் 10–07–2025.

பெயர் = ராமுபாண்டி வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2,5 முதல் 10 ம்பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. தொடர்ச்சி–

(1) நான் தாக்கல் செய்துள்ள பிராது விவரத்திலும், நிரூபண வாக்குமூலத்திலும் என் தகப்பனார் கிரையம் செய்ததாக சொல்லும் ஆவணத்தின் எண்ணைக் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கூட்டுப்பட்டா எண்.340 ஐ என்னுடைய சொத்து விவரத்தில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள நான்குமால் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அதனைச் சொல்லமுடியுமா என்றால் மேற்கே பாக்கியநாயக்கர் இடம், வடக்கே அழகர்சாமி நாயக்கர் இடம், கிழக்கே தனுஷ்கோடி, ராமசாமி இடம், தெற்கே மாரியநாயக்கர் இடம் உள்ளது. தாவா சர்வே எண்.80/11B–ல் தான் என்னுடைய மாமா 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என் தகப்பனார் கிரையம் பெற்ற பிறகு தாவா இடத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டுவதற்கு நாங்கள் ஆட்சேபணை செய்தோமா என்றால் அதிகாரிகளிடம் தெரிவிக்கவில்லை, எங்களுக்குள் சத்தம் போட்டுக்கொண்டோம். தாவா வழக்கு சொத்தின் மார்க்கெட் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் 10 லட்சம் ரூபாய் வரை போகும் என சாட்சி கூறுகிறார்.

(2) என் தகப்பனார் கிரையம் பெற்ற சர்வே எண்.80/11ன் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் மொத்தம் 24 செண்ட். சர்வே எண்.80/11B–ல் 8 செண்ட் கிரையம் பெற்றாரா அல்லது சர்வே எண்.80/11A ல் 8 செண்ட் கிரையம் பெற்றாரா என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் சகோதரர் ராமசாமியிடம் என் தந்தை முறையாக கிரையம் பெற்றிருந்தால் அதிகாரிகளிடம் பட்டா பெற்றிருப்பார் என்றால் சரிதான். என் அப்பா பட்டா பெற மனு கொடுத்தாரா என்றால் நான் தான் கொடுத்தேன். நான் யாரிடம்

மனு கொடுத்தேன் என்றால் வக்கீலிடம் மனு கொடுத்தேன். சர்வே எண்.80/11ல் 8 செண்ட் கிரையம் பெற்ற பின்னர் அனுபவம் செய்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை, நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா இறந்த தேதி வருடம் தெரியுமா என்றால் 7 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். என் தந்தை உயிருடன் இருந்த காலத்தில் 1,2 பிரதிவாதிகள் மீது நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடமிருந்தும் மற்றும் அவருடைய சகோதரரிடமிருந்தும் என் தகப்பனார் உண்மையாக கிரையம் பெற்றிருந்தால் அவர்கள் மீது வழக்கு நடவடிக்கை எடுத்திருப்பார், போலியாக ஏற்பாடு செய்திருப்பதால்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

(3) தாவாச்சொத்து பூமியில் எவ்வாறு உள்ளது என்றால் சதுரமான நிலமாக உள்ளது. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 11.5 செண்ட் தாவா சர்வே எண்ணில் உள்ளது என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதன்பேரில் பட்டா 1414 ஏற்பட்டு, 2ம் பிரதிவாதி தற்போது அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான். 08.02.2019ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் மனுவிற்கு ரசீது எதுவும் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அந்த ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். 1,2 பிரதிவாதிகள் மீது நான் எந்த புகாரும் தெரிவிக்கவில்லை. வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.80/11ல் எந்த பகுதியை என் தந்தை கிரையம் பெற்றார் என்று பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் குறிப்பிட்டுச்சொல்லாமல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை செல்லாது என கேட்டுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்ணில் உள்ள சொத்து 1ம் பிரதிவாதிக்கும் ராமசாமி என்பவருக்கும் கிரையப்பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

(4) ராமசாமி என்பவரை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர் மேற்குப்பக்கம் ஒதுங்கி விட்டதால் அவரை சேர்க்கவில்லை. ராமசாமி என்பவர் இவ்வழக்கின் முக்கிய கட்சி என் தங்கை லதாவை திருமணம் செய்த காரணத்தினால் 1,2 பிரதிவாதிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் வீண்

வம்பிற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராமசாமி என்பவர் இறந்து 3 மாதங்கள் ஆகும். ராமசாமிக்கு பாண்டித்துரை என்ற ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். 3ம் வாதி கரந்தமலை குடியிருக்கும் வீடு பொதுவில்தான் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும், அவரது உடன்பிறந்த சகோதரரும் என் தந்தைக்கு எந்தவித கிரையமும் கொடுக்கவில்லை என்றாலும், நான் 1,2 பிரதிவாதிகளை பழிவாங்கவேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

3,4 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.07.10 15:32:17 +0530